(-) ஊழியர் கடன் பொறுப்புக் கணக்கு			-	(1,467,383)
			188,916,063	189,353,380

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
நிதி நிலைக்கான குறிப்புகள்
2020.12.31 ஆந் திகதிக்கான

அறவிட முடியாக் கடனுக்கான ஒதுக்கீட்டு அட்டவணை

குறிப்பு : 16 A

கடனாளிகள்	மொத்தம்	ஒப்புக் கொள்ளப்படாத மற்றும் மீட்டெடுக்க முடியாதவை	மீட்டெடுக்க முடியாதவை	5% ஒதுக்கீடு	மொத்த ஒதுக்கீடுகள்
	2020				
	ரூபா.	ரூபா.	ரூபா.	ரூபா.	ரூபா.
திரையரங்குகள்	362,737,356	98,421,177	264,316,179	13,215,809	111,636,986
தயாரிப்பாளர்கள்	83,876,799	42,421,871	21,454,928	1,072,746	63,494,617
பிற	177,054,722		177,054,722	8,852,736	8,852,736
ஊழியர்களின் கடன்கள்	19,532,289	-	19,532,289	-	-
	643,201,165	**160,843,048**	**482,358,117**	**23,141,291**	**183,984,339**

இருப்பு முன்/ கொ	183,870,850	111,603,285	63,479,255	8,788,310
இலாபங்களை இலாபக் கண	113,490	33,701	15,362	64,426
	183,984,339	**111,636,986**	**63,494,617**	**8,852,736**

கடனாளிகளுக்கான குறைபாடுகளை சரிசெய்தல்

2020.01.01 ஆந் திகதி நிலவரப்படி	183,870,850
இலாபங்களை இலாபக் கண	113,490
இருப்பு பின்/ கொ 31.12.2020	**183,984,339**

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
நிதி நிலைமைக்கான குறிப்புகள்
2020.12.31 ஆந் திகதிக்கான

	2020 ரூபா.	2019 ரூபா.
குறிப்பு : 17		
வைப்புத்தொகை மற்றும் முற்பணம் செலுத்துதல்		
வைப்புக்கள்	3,851,112	3,792,893
முற்பணம் செலுத்துதல்	204,407	492,508
நலன்புரி சங்கத்திற்கு இறுதிச் சடங்குகளுக்கான உதவிகள்	17,158	-
	4,072,676	4,285,401
அறவிடப்பட முடியாத கடன்களுக்கான குறைபாடுகளை சரிசெய்தல்	(653,728)	(653,728)
	3,418,948	3,631,673
குறிப்பு : 18		
பணம் மற்றும் வங்கி இருப்பு		
மக்கள் வங்கி - ந. க. இல. 004-1-001-1-0208647	188,442	874,707
மக்கள் வங்கி - ந.க. இல. 055-1-001-5-0667533	756,913	1,530,032
மக்கள் வங்கி - ந. க. இல. 004-1-001-6-0208664	917,929	3,420,112
இலங்கை வங்கி - ந.க. இல. 0002323272	4,362,273	(241,062)
இலங்கை வங்கி - ந.க. இல. 0002323131	786,200	792,846
இலங்கை வங்கி - ந.க. இல. 0002323354	6,085,060	4,328,874
இலங்கை வங்கி - ந. க. இல. 0002323363	1,334,998	11,035,364
இலங்கை வங்கி - ந. க. இல. 0005002189	8,598,724	763,288
இலங்கை வங்கி - ந. க. இல. 5152460	-	976,303
	23,030,540	23,480,463
கையிருப்பில் உள்ள நிதி		
சில்லறைத் தொகை - தலைமை அலுவலகம்	-	36,134
சில்லறைத் தொகை - கலையரங்கம்	25,000	24,970
சில்லறைத் தொகை - திரைப்படக் காப்பகம்	34	34
	25,034	61,138
மூன்று மாதங்களில் முதிர்ச்சியடையும் வைப்புத்தொகை		
REPO வைப்புத்தொகை	112,074,307	
திறைசேரி உண்டியல்கள்	9,615,868	
	121,690,175	-
மொத்தம்	144,745,749	23,541,601
குறிப்பு - 19		
மாணியங்கள்		
திறைசேரி உண்டியல்கள்	102,160,132	104,181,910
(-) பணப் பெறுமதி நீக்கம்	(11,492,198)	(17,021,778)
	90,667,934	87,160,132

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
நிதி நிலைக்கான குறிப்புகள்
2020.12.31 ஆந் திகதிக்கான

	2020	2019
	ரூபா.	ரூபா.
குறிப்பு : 20		
பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள்		
முன்கொண்டு வரப்பட்ட இருப்பு 2020.01.01	42,365,554	43,151,056
2018 ஆம் ஆண்டின் ஒதுக்கீடுகளின் குறைபா	-	497,151
ஆண்டுக்கான ஒதுக்கீடுகள்	12,457,075	3,486,140
பணச் செலுத்துகை	(3,486,995)	(4,768,794)
	51,335,633	42,365,554
(திறைசேரி உண்டியல்களில் முதலீடு)		

குறிப்பு : 21		
வைப்புக்கள்		
NFC திரையரங்குகளின் பிணை வைப்பு	375,272	430,272
சிற்றுண்டிச்சாலை வைப்பு	30,000	35,000
பாதுகாப்பு வைட்திரையரங்குகள்	2,326,727	2,573,754
பணியாளர்கள்	5,000	5,000
திரைப்படக் கூட்டுத்தாபன	7,500	7,500
சினிமாத் திட்டம்	45,000	45,000
சுகாதாரச் சேவைகள்	160,000	160,000
	2,949,499	3,256,525

குறிப்பு : 22		
திரைப்பட வாடகைக்கு கடன் கொடுத்தவர்கள்		
திரைப்பட வாடகைக்கு கடன் கொடுத்தவர்ச	251,888,838	269,193,607
(-) கடன் வழங்குநர்களுக்கான குறைபாடுகள	(18,046,804)	(18,046,804)
	233,842,034	251,146,803

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
நிதி நிலைக்கான குறிப்புகள்
2020.12.31 ஆந் திகதிக்கான

குறிப்பு - 23	2020 ரூபா.	2019 ரூபா.
மற்ற கடனாளர்கள்		
திரட்டப்பட்ட செலவுகள் (2.10)	51,097,862	46,297,558
செலுத்தப்பட்ட VAT	152,612	152,612
கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கீடு	5,125,000	3,215,795
இறைவரி ஆணையாளர் (முத்திரைகள்)	47,723	55,848
கோரப்படாத ஊதியங்கள்	946,911	947,611
E. P. F.	656,759	1,901,241
E. T. F.	72,955	242,662
இதர கடன் வழங்குநர்கள்	853,954	1,429,773
(- செலுத்தப்படாத பொறுப்புக்களுக்கான ஒ	(644,840)	(644,840)
தேசிய திரைப்பட மேம்பாட்டு நிதி	3,525,795	3,697,545
ரித்மா சேர்கிட் நிர்வாகக் குழு	4,656,588	5,316,841
செலுத்தும் வரியைச் செலுத்துதல்	38,253	38,253
சம்பளங்கள் மற்றும் ஊதியங்களுக்கான ஒத	577,190	577,190
பெறத்தக்க உற்பத்திக் கடன் வட்டிக்கான ஒ	1,028,122	1,028,122
அரச செயலாற்றுகைச் சபை	114,801	114,801
சினிமா கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்	2,618,552	-
திரைப்படங்களின் மறுசீரமைப்பு	-	(485,692)
சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட்	976,303	976,303
	71,844,541	64,861,624

தலைவர்
இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் பிற சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் தொடர்பாக 2018 இலக்கம் 19 இனைக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் படி கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்று

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான தகுதியுடைய கூற்று, அத்திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் அறிக்கை மற்றும் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் படி எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்காக அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் விளைவுகள் தவிர்த்து, கூட்டுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான நிதி நிலைமைகள் மற்றும் அத்திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றுகையையும் காசுப் பாய்ச்சிலினையும் இலங்கை கணக்கீட்டு தர நியம அடிப்படைகளுக்கு அமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு தர நியம இலக்கம் 01 இன் 66 ஆம் பந்தியின் படி 12 மாதங்களினுள் கிடைக்கப்பெற வேண்டிய ஊழியர் கடன் தொகை நடைமுறைச் சொத்தாகவும், 12 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்தின் பின்னர் அறவிடப்பட வேண்டிய பெறுமதி நடைமுறை அல்லாத சொத்தாகவும், வகைப்படுத்தப்பட்டு நிதி நிலைக் கூற்றில் பதிவு செய்யப்பட வேண்டி இருந்தாலும், 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு அதன் கூட்டுத்தொகை ரூபா. 19,532,289 ஆகக் காணப்பட்ட ஊழியர் கடன் வகைப்படுத்தலின்றி நடைமுறைச் சொத்தாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு தர நியம இலக்கம் 01 இன் 69 ஆம் பந்தியின் படி ஊழியர் பணிக்கொடையை ஒதுக்கும் போது எதிர்வரும் 12 மாத காலத்தினுள் செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடையின் பெறுமதி நடைமுறைப் பொறுப்பாகவும், எஞ்சிய பணிக்கொடைக் கொடுப்பனவுப் பெறுமதி நடைமுறை அல்லாத பொறுப்பாகவும் காட்டப்பட வேண்டியிருந்தும், அவ்வாறு வகைப்படுத்தலின்றி மொத்த ஒதுக்கீடான கூட்டுத்தொகை ரூபா. 51,335,633 ஆன பெறுமதி நடைமுறை அல்லாத பொறுப்பாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இ) இலங்கை கணக்கீட்டு தர நியம இலக்கம் 01 இன் படி நிதி நிலைக் கூற்றில் வர்த்தக மற்றும் பிற செலுத்தப்பட வேண்டிய பெறுமதிகள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் தனித் தனியாக காட்டப்பட வேண்டியிருந்தும், கூட்டுத்தாபனத்தின் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் நிதி நிலைக் கூற்றில் மொத்தம் ரூபா. 51,097,862 ஆன தொகை நிதிப் பொறுப்பான அட்டுறுச் செலவுகள் இதர கடனாளிகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) இலங்கை கணக்கீட்டு தர நியம இலக்கம் 01 இன் 54 ஆம் பந்தியின் படி நிதி ஒதுக்கீடுகள் மற்றும் செலுத்தப்பட வேண்டிய வரித் தொகை நிதி நிலைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் தனியாக விளக்கியிருக்க வேண்டும் என்றாலும், கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட வேண்டிய சேர்க்கப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் வரியின் கூட்டுத்தொகை ரூபா. 152,612 உம் ஈட்டும் போது செலுத்தப்பட வேண்டிய வரியின் கூட்டுத்தொகை ரூபா. 38,253 உம் கணக்காய்வுக் கட்டணத்திற்கான நிதி ஒதுக்கீட்டின் கூட்டுத்தொகை ரூபா. 5,125,000 உம் பிற கடனாளிகளின் கீழ் பதிவு செய்யப்பட்டு நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது.

(உ) இலங்கை கணக்கீட்டு தர நியம இலக்கம் 07 இன் 07 ஆம் பந்தியின் படி திறைசேரி உண்டியல்கள் மற்றும் மீள் விற்பனை உண்டியல்களை கணக்கிடும் போது 2020 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு முதிர்ச்சியடைவதற்கு எஞ்சியுள்ள காலம் 03 மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான முதலீடுகள் நிதி நிலைக் கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் பணம் மற்றும் பணத்துக்குச் சமனான திரவச் சொத்துக்களாக காட்டப்பட

வேண்டியிருந்தும், 2020 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு 03 மாதக் காலத்தினுள் முதிர்ச்சியடைவதற்குள்ள திறைசேரி உண்டியல்கள் 26 இன் பெறுமதி ரூபா. 118,97,660 உம் திறைசேரி உண்டியல் மீள் விற்பனைகள் (REPO) 11 உம் ஆக மொத்தப் பெறுமதி ரூபா. 108,680,741.10 ஆன பணம் மற்றும் பணத்திற்கு சமனான திரவச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2020 ஆம் ஆண்டின் காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது இலங்கை கணக்கீட்டு தர நியம இலக்கம் 07 இற்கு ஏற்புடையதற்றதாக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் நிதி நிலைக் கூற்றுக்களின் உருப்படிகளின் பெறுமதிக்கிடையில் உள்ள வித்தியாசங்களை அடிப்படையாகக் கொண்டு கூட்டுத்தாபனத்தின் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதன்படி உண்மையான பண வரவுகள் மற்றும் பணம் வெளியேறிச் செல்ல்லை அடிப்படையாகக் கொண்டு தேவைப்படும் சீராக்கங்களுடன் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது பொதுத் திறைசேரி கிடைப்பனவுகளின் மூலம் பிறப்பிக்கப்பட்ட மொத்தம் ரூபா. 105,000,000 ஆன காசுப் பாய்ச்சல், நிதியியல் செயற்பாடுகளின் கீழமைந்த காசுப் பாய்ச்சல்களாக காட்டப்பட வேண்டியிருந்தும், அவற்றை முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழமைந்த காசுப் பாய்ச்சலாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

(எ) இலங்கை கணக்கீட்டு தர நியம இலக்கம் 16 இன் 79 (அ) பந்தியின் படி செயற்பாடற்ற சொத்துக்கள் தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் தேறிய பதிவேடுகளின் பெறுமதியுடன் காட்டப்பட வேண்டியிருந்தும், கூட்டுத்தாபன வளாகத்தினுள் மற்றும் அதற்கு வெளியே கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கட்டிடங்களினுன் காணப்படுகின்ற நிகர சொத்துக்கள் மற்றும் காலாவதியான பழைய சொத்துக்கள் தொடர்பில் போதுமானளவு தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் எடுத்துக் காட்டப்பட வில்லை.

(ஏ) இலங்கை கணக்கீட்டு தர நியம இலக்கம் 37 இன் படி எதிர்பாராத பொறுப்புக்கள் தொடர்பிலும் வழக்கு விசாரணைகள் தொடர்பிலும் நிதிக் கூற்றினால் எடுத்துக் காட்டுவதற்கும் அதற்கான ஒதுக்கீடுகள் பற்றியும் வெ ளிப்படுத்த வேண்டியிருந்தும், மீளயாவுக்குட்பட்ட ஆண்டிறுதித் திகதிக்கு பல்வேறு நீதிமன்றங்களிலும் விசாரிக்கப்பட்டு வந்த கூட்டுத்தாபன பிரதிவாதியாக 09 வழக்கு நடவடிக்கைகளும், தொழில் திணைக்களத்தின் கைத்தொழில் பிணக்குச் சட்டத்தின் கீழ் நடைபெறும் 05 விசாரணைகளும், மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் 09 விசாரணைகள் தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஐ) இலங்கை கணக்கீட்டு தர நியம இலக்கம் 38 இன் 68(அ) ஆம் பந்தியின் படி கட்புலனாகாத சொத்துக்களில் ஆகு செலவாக அடையாளம் காணப்பட வேண்டியதில்லை. மேலும் நிதி நிலைக் கூற்றில் நிலையான சொத்துக்களின் கீழ் நீண்டகால சொத்தாக கண்டறிந்ததன் பின்னர் அவற்றின் பயனுறுதி ஆயுட் காலத்தை மதிப்பீடு செய்து, வருடாந்தம் மதிப்பிறக்கம் செய்யப்பட்டு அதற்கமைய வருமானக்

கூற்றில் செலவுகளைக் கண்டறிய வேண்டும் என்றாலும், மொத்தமாக ரூபா. 6,587,305 ஆன தொகை கட்புலனாகாத சொத்துக்களின் ஆகு செலவாக கணக்கிடப்பட்டுள்ளது.

(ஒ) 2020 செப்டம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு கணக்காய்வில் முன்வைக்கப்பட்ட திரைப்பட வாடகை கடனாளிகளின் விபரத்துடன் கூடிய அட்டவணையின் படி கடன் நிலுவை ரூபா. 381,558,535 ஆக இருந்தாலும், அத்திகதிக்கு பொதுப் பேரேட்டில் திரைப்பட வாடகை கடனாளி நிர்வாகக் கணக்கிற்கு ஏற்ப நிலுவை ரூபா. 362,737,356 ஆன தொகையாக இருந்ததால் ரூபா. 18,821.178 ஆன தொகையில் வித்தியாசம் இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஓ) கூட்டுத்தாபனத்தின் வருமான செலவுக் கணக்குகளைத் தீர்ப்பதற்கு போதுமானதாக இல்லை என்பதனால் 2011 ஆம் ஆண்டிலிருந்து பொதுத் திறைசேரியிலிருந்து ஊழியர் களின் சம்பளம் மற்றும் மூலதனச் செலவுகளுக்காக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்தன. மீளாய்வுக்குட்பட்ட ஆண்டும் அதற்கு முன்னைய 05 வருடங்களினுள் கூட்டுத்தாபனம் திறைசேரியின் வழங்கல்கள் கிடைக்க முன்னர் தொடர்ச்சியாக செயற்பாட்டு நட்டங்களைப் பெறும் நிலையில் இருந்ததாக அவதானிக்கப்பட்டுள்ளது. தற்போது அரசின் நிதி உதவிகள் அல்லது திரைப்பட விநியோகம் மற்றும் கள ஒழுங்குபடுத்தல் அதிகாரத்தை கூட்டுத்தாபனம் பெறுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கையை அடைந்து கொள்வதற்கும் அல்லது இல்லாவிடினும் கூட்டுத்தாபனத்தை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வது நிச்சயமற்றது என அவதானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு அமைவாக (இ.க.த. நி) இக் கணக்காய்வு நடாத்தப்பட்டுள்ளது. அத்தகைய கணக்கீட்டு தர நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படையை வழங்குவதற்கு நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதென்றும் பொருத்தமானதென்றும் நான் நம்புகிறேன்.

1.3 கூட்டுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கிய பிற தகவல்கள்.

இந்தக் கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆனால் நிதிக் கூற்றில் மற்றும் அது தொடர்பில் எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், பிற தகவல்கள் எனக் கருதப்படுகின்றது. இந்த பிற தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

நிதிக் கூற்று தொடர்பிலான எனது அபிப்பராயத்தில் பிற தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதோடு அது பற்றி எந்த விதத்திலான சான்றுபடுத்தலோ அல்லது அபிப்பிராயமோ தெரிவிக்கமாட்டேன்.

நிதிக் கூற்று தொடர்பாக எனது கணக்காய்விற்கு ஏற்ப, மேற்கூறிய அடையாளம் காணப்பட்ட பிற தகவல்களைப் பெற முடியுமாக இருந்தால் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது பிற தகவல்கள் நிதிக் கூற்றுடன் அல்லது கணக்காய்வில் அல்லது வேறு விதத்தில் பெற்றுக்கொண்ட எனது அறிவிற்கு ஏற்ப அளவு ரீதியாக இணங்காதிருப்பது பற்றி கவனிப்பதும் எனது பொறுப்பாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட பிற தகவல்களின் அடிப்படையில் மற்றும் என்னால் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் அடிப்படையில், இந்த பிற தகவல்கள் அளவு ரீதியில் பிழையாகக் காட்டப்பட்டுள்ளது என நான் முடிவு செய்வதாயின், அந்த விடயத்தை நான் அறிக்கையிடுவது அவசியமாகும். ஆனால் இது தொடர்பில் எனக்கு அறிக்கையிடுவதற்கு எதுவும் இல்லை.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் கட்டுப்பாட்டுத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிநிலை அறிக்கைகள் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் உண்மையாகவும், நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்ற வகையிலும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகக் காணப்படுவதோடு, முகாமைத்துவம் கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலே தவிர தொடர்ந்தியங்கும் என்ற அடிப்படையில் கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைப்பாட்டுக்குரிய விடயங்களை கண்டறிவதற்கும் முகாமைத்துவம் பெறுப்பாக இருக்கும்.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையுடன் தொடர்புடைய பொறுப்புக்கள், ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்த நிதிக் கூற்றிலும், மோசடி அல்லது தவறினாலான முக்கிய பிறழ் கூற்றேதும் இல்லையென்ற நியாயமான உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதும் எனது கருத்துரையை உள்ளடக்கி கணக்காய்வாளர் அறிக்கையை சமர்ப்பிப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர்மட்ட உறுதிப்படுத்தலாக இருந்தாலும், குறித்த கணக்காய்வு இலங்கை கணக்காய்விடல் தர நியமங்களுக்கமைவாக நடத்தப்பட்டதாக உத்தரவாதப்படுத்தப்படாது. அவ்வாறே, ஏதாவது பிறழ் கூற்றுக்கள் இருந்தால் அது தொடர்பாக கண்டறியப்படும் . பிறழ் கூற்றுக்களில் மோசடி அல்லது தவறிலிருந்து ஏற்பட முடியுமென்பதுடன், தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது கூட்டாகவோ நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்படும் பொருளாதாரத் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்துவதாயின் அவை முக்கியமானவை என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்விடல் தர நியமங்களுக்கேற்ற விதத்திலான கணக்காய்வின் ஒரு பகுதியென்ற வகையில் நான் கணக்காய்வு முழுவதிலும் தொழில்சார் நீதியை பிரயோகிப்பதுடன் தொழில்சார் சந்தேகங்கள் நிலவுவதாகவும் காணப்படுகின்றது. மேலும்,

- நான் மோசடி அல்லது தவறின் காரணத்தினாலான நிதிக் கூற்றுக்களின் முக்கியமான பிறழ் கூற்றின் ஆபத்துக்களை இனங்காணல் அல்லது மதிப்பீடு செய்யும் சந்தர்ப்பங்களின் போது உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு மோசடி அல்லது தகவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துக்களை விடுவித்துக் கொள்வதற்கும், போதிய மற்றும் உசிதமான கணக்காய்வுச் சாட்சியங்களைப் பெற்றுக் கொள்வதற்கு எனது அபிப்பிராயத்தின் அடிப்படையாகவும் உள்ளது. மோசடியின் விளைவினாலான ஆனால் கண்டறியப்படாத முக்கிய பிறழ் கூற்றின் ஆபத்தானது தவறினாலான ஆபத்தினை விடவும் மிகவும் பாரதூரமானது. ஏனெனில், மோசடியானது கூட்டுச் சக்திக்கும் , உள்நோக்குடைய புறக் கணிப்புக்களுக்கும், பிறழ் கூற்றுக்களுக்கும் அல்லது உள்ளக கட்டுப்பாடு மீறப்படுவதற்கும் காரணமாக அமையும்.

- கூட்டுத்தாபனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் வினைதிறன் தொடர்பான கருத்தினை முன்வைக்கும் நோக்கத்திற்கல்லாது, சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான கணக்காய்வுச் செயன்முறைகளை திட்டமிடுவதற்காக கணக்காய்வுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கத்தினை நான் பெற்றுக்கொள்கிறேன்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாட்டினையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்துவத்தையும் முகாமையினால் வெளிப்படுத்தப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களையும் நான் மதிப்பீடு செய்கிறேன்.

- நிறுவனமாக தொடர்வதற்கு இயலுமையில் குறிப்பிடத்தக்க சந்தேகம் ஏற்படுத்தும் நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய முக்கியமான நிச்சயமற்ற தன்மை காணப்படின், கணக்கீட்டின் படி இயங்கும் நிறுவன அடிப்படையை முகாமை பயன்படுத்தும் விதத்திற்கேற்பவும் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றின் படியும் முடிவெடுக்கின்றேன். முக்கியமான ஏதோவொரு நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக நான் முடிவெடுத்தால் நிதிக் கூற்றுக்களில் தொடர்புடைய வெளிப்படுத்தல்களுக்கான எனது கணக்காய்வாளர் அறிக்கையில் உரிய கவனம் செலுத்துமாறு வேண்டிக் கொள்ளப்படுவதுடன், அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதியளவில் இல்லாதிருந்தால் எனது கருத்தை மாற்றுமாறு நான் வேண்டப்படுவேன். எனது முடிவுகள் யாவும் எனது கணக்காய்வு அறிக்கையின் திகதி வரையில் நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றின் அடிப்படையிலேயே இருக்கும். எனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைகள் நிறுவனம் இயங்கும் நிறுவனமாக தொடர்வதிலிருந்தும் நிறுத்தப்படுவதற்கு காரணமாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுக்களின் முன்வைப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு றெய்யப்பட்டுள்ளதோடு, அதற்கு அடிப்படையான பரிவர்த்தனைகளையும் நிகழ்வுகளையும் உசிதமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

  எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்டுள்ள முக்கிய கணக்காய்வு தேடல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டிலுள்ள குறைபாடுகள் உள்ளடங்கலாக ஏனைய விடயங்களுடன் குறிப்பிடத்தக்க நிர்வாகம் தொடர்பாக சாட்டப்பட்டுள்ளவர்களுடன் நான் கலந்துரையாடுகிறேன்.

2. பிற சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதி தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 கீழுள்ள தேவைப்பாடுகளுக்காக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பான விசேட நிதி ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(அ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய, எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவு தவிர்த்து, கணக்காய்விற்காக அவசியப்படும் சகல தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையில் காட்டும் விதத்தில் உரிய நிதி அறிக்கைகள் கூட்டுத்தாபனத்தினால் பேணப்பட்டிருந்தன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (i) (ஈ) (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கேற்ப கூட்டுத்தாபனத்தினால் முன்னளிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் ஒத்திசைவாக உள்ளது.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (i) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கேற்ப இவ்வறிக்கையில் 1.2 (ஈ), (உ) மற்றும் (ஒள) என்ற அவதானிப்புக்களைத் தவிர்ந்து முந்திய வருடங்களில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளையும் உள்ளடக்கியே நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்படும் செயன்முறைகள் மற்றும் பெற்றுக் கொண்ட சான்றின் அடிப்படையில் மற்றும் போதியளவிலான விடயங்களுக்கு வரையறை செய்வதன் மூலம், பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களை முன்வைக்கும் அளவுக்கு எதுவும் எனது அவதானத்திற்கு உட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கேற்ப கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் ஏவரேனுமொரு உறுப்பினர் அத்தகைய கூட்டுத்தாபனத்துடன் இணைந்து ஏதேனும் ஒரு ஒப்பந்தம் தொடர்பாக நேரடியாக அல்லது வேறு விதத்தில் சாதாரண வியாபார ஏதுக்கு அப்பால் தொடர்பு உள்ளதாகவும்,

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கேற்ப, கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானங்கள் தவிர்த்து ஏதேனும் ஏற்புடையதான எழுத்திலான அல்லது கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட பணிப்புகளுடன் இணங்கியொழுக வில்லை என கூறுவதற்கும்,

சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிக்குறிப்பு	விபரம்
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13 ஆம் பிரிவு, VII ஆம் அத்தியாயத்தின் 12.2.3 மற்றும் 12.2.6 ஆம் பிரிவுகள் மற்றும் 2003 ஜூன் மாதம் 02 ஆந் திகதிய பீஈஉ/12 இனையுடைய அரச வர்த்தகச் சுற்றறிக்கை இலக்கம் 9.3.1 இன் VI, VII மற்றும் VIII ஆம் பிரிவுகள்	மீளாய்வுக்குட்படும் ஆண்டில் கூட்டுத்தாபனத்தில் 57 பதவிகள் வெற்றிடமாக நிலவுவதுடன், அப்பதவிகளுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்குப் பதிலாக பதிற் கடமையாற்றல் மற்றும் பிற பல்வேறு அடிப்படைகளில் அப்பதவிகளில் 14 பதவிகள் முழுமைப்படுத்தப்பட்டுள்ளன. வெற்றிடங்களை நிரப்புவதற்கு பதிலாட்களை நியமிப்பதற்கு திட்டங்கள் எதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, இப்பதவிக்காக நீண்ட காலமாக நிரந்தரப் பதவிக்கு ஊழியர்கள் எவரும் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

2.2.3. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 12 (எ) பிரிவின் படி தேவைப்பாட்டுக்கு ஏற்ப கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அவதானங்கள் தவிர்ந்த கூட்டுத்தாபனத்தின் அதிகாரம், தத்துவங்கள் மற்றும் அதன் தொழிற்பாடுகளுக்கு இணங்காத வகையில் தொழிற்பட்டுள்ளது எனக் கூறுவதற்கும்.

2.2.3 . 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஏ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ப பின்வரும் விடயங்கள் அவதானிப்புக்கள் தவிர்ந்த கூட்டுத்தாபனத்தின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்ததாகவும் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் உரித்துடைய சட்ட விதிகளுக்கு ஏற்புடையதாக பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு பயன்படுத்தப்படவில்லை எனவும்,

(அ) 2006 ஜனவரி மாதம் 25 ஆந் திகதிய தேசிய பெறுகை முகவர் நிலையச் சுற்றறிக்கை இலக்கம் 08 இன் அரச பெறுகை வழிகாட்டல் குறிப்பின் படி பெறுகைச் செயற்பாட்டினைப் பயன்படுத்தாமல் மொத்தப் பெறுமதி ரூபா. 99,965,061 ஆன கட்டட நிர்மாண ஒப்பந்தத்திற்கு 2019 ஏப்ரல் மாதம் 05 ஆந் திகதி கூட்டுத்தாபத்தினால் அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்காக இரு தரப்பினருக்கிடையிலும் கைச்சாத்திடப்பட்ட இருதரப்பு ஒப்பந்தத்தின் படி 2020 ஆகஸ்ட் மாதம் 28 ஆந் திகதிக்கான கூட்டுத்தொகை ரூபா. 3,134,107 ஆன பெறுகை முறைக்குப் புறம்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரரான அரச கூட்டுத்தாபனத்திற்கு

செலுத்தப்பட்டுள்ளதோடு, இதுவரை இந்த கட்டட நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான "தரங்கனீ" திரையரங்கிற்காக 4k சினிமாப்படக் காட்சி இயந்திரத்திற்காக (Projector) ரூபா. 11,460,153 ஆன தொகை செலுத்தப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கொள்வனவுக்குரிய கடித ஆவணங்கள் முறையாகவும் வெளிப்படைத் தன்மையாகவும் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை என்பதோடு, இந்தக் கொள்வனவு 2006 ஜனவரி மாதம் 25 ஆந் திகதிய தேசிய பெறுகை முகவர் நிலையச் சுற்றறிக்கை இலக்கம் 08 இன் அரச பெறுகை வழிகாட்டல் குறிப்பின் படி பெறுகைச் செயற்பாட்டினைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2020/2021 ஆம் ஆண்டுகளில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான "தரங்கனீ" திரையரங்கின் பயன்பாட்டிற்காக பொருத்தப்பட்டிருந்த இந்த சினிமாப்படக் காட்சி இயந்திரத்தினைப் பொருத்தியதன் பின்னர் பல சந்தர்ப்பங்களில் செயலிழந்து காணப்பட்டதோடு, தற்போது அது செயற்பாட்டு நிலையில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

2.3 பிற கணக்காய்வு அவதானங்கள்

(அ) 2021 ஜூலை மாதம் 19 ஆந் திகதி நடைபெற்ற பொது தொழில் முயற்சிகள் செயற்குழுக் கூட்ட அறிக்கையின் படி 2021 ஆகஸ்ட் மாதம் 05 ஆந் திகதி "கோப்" குழுவின் மூலம் இலக்கம் COPE/9/1/2020 இனையுடைய கடிதத்துடன் 14 குழுக் கட்டளைகள் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட காலப்பகுதியைக் குறிப்பிட்டு வழங்கப்பட்டுள்ள அந்தக் கட்டளைகளுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட்டுள்ள 10 பணிகள் இந்த அறிக்கையில் திகதி குறிப்பிடப்பட்டு நிறைவு செய்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறைகளின் படி கோப் குழுவிற்கும் கணக்காய்வு தலைமை அதிபதிக்கும் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கைக்கான உயர் தர சினிமாக் கலாசாரத்தை உருவாக்குவதற்காக அவசியப்படும் கலை, கோட்பாட்டு மற்றும் தொழில்நுட்ப ரீதியினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கும் நோக்கினை முன்னிருத்தி திரைப்படவியல் தொடர்பான ஒரு வருட "டிப்ளோமா பாடநெறி" ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரண்டு கட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இந்தப் பாடநெறிக்காக 2020 ஆம் ஆண்டில் 50 மாணவ மாணவிகள் சேர்த்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தும், அம்மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவில்லை. காலாவதியான உபகரணங்களின் பயன்பாடும், தொழில்நுட்ப உபகரணங்களின் பற்றாக்குறையும், நவீன கேட்போர்கூட வசதியின்மையும் இந்தப் பாடநெறிக்கு விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து இருத்ததோடு, 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 திசெம்பர் மாதம் வரையான 05 வருடங்களினுள் 94 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டாலும், மீளாய்வுக்குட்பட்ட ஆண்டிறுதித் திகதியில் 22 மாணவர்கள் அதாவது, நூற்றுக்கு 23 பேர் மாத்திரமே அப்பாடநெறியை பூர்த்தி செய்திருந்தார்கள்.

(இ) 2019 ஆம் ஆண்டின் கணக்குப் பதிவுகளை கணனி மூலம் மேற்கொள்வதற்காக முறையான பெறுகை வழிமுறையின்றி "க்விக் புக்" (Quick Book) மென்பொருள் அமைப்பினை கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. நிறுவனத்தினுள் தகவல் தொழில்நுட்ப பிரிவும் பயிற்சியளிக்கப்பட்ட ஊழியர்களும் இன்மையினால், முறைசார்ந்த உள்ளக நிர்வாக அமைப்புக்கான வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு அமைப்புக்கு இணையாக லெஜர் பதிவேடுகள் கையினால் எழுதி தயாரிக்கப்படல் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதோடு, 2021 ஒக்டோபர் மாதமளவில் 2019 கணக்கு வருடத்திற்கு உரித்தான புள்ளிவிபரவியல் தரவுகளை அக்கணனித் தொகுதியினுள் உள்ளீடு செய்வதற்கும் அதனை அழிப்பதற்கும் அதில் உள்ள விசேட திறன் காரணமாக பெறப்படும் தரவுகள் மற்றும் தகவல்களின் நம்பகத் தன்மை தொடர்பில் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. மேலும், தரவுகளின் மேலதிகப் பிரதிகள் (Backup) இனை பாதுகாப்பாக வைத்திருக்காமையும், தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றினை மீண்டும் தொகுதியில் உள்ளீடு செய்ய முடியாமற் போனமையும், தொகுதிக்கான வினைத்திறன் மிக்க வன்பொருளைப் பெற்றுக்கொள்ளாமையும், உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வு பிரிவுக்கு தொகுதியினுள் பிரவேசிப்பதற்கான வாய்ப்பு வரையறுக்கப்பட்டமை காரணமாகவும் கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டுத் தொகுதி ஆபத்து நிலையில் காணப்பட்டது.

(ஈ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட இலக்கம்: DMS/360/NFC/P மற்றும் 1999 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆந் திகதிய "தேசிய திரைப்படக் கொள்கை மற்றும் அது தொடர்பான வழிகாட்டல்" இன் படி (நிலவிர அறிக்கை) கூட்டுத்தாபனத்திடம் காணப்பட்ட திரைப்பட விநியோக ஏகபோக அதிகாரம் 04 தனியார் விநியோகச் சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அச்சபையானது திரைப்படங்களின் விநியோக முறையை நியாயமான வகையில் மேற்கொள்ளாததன் காரணமாக 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆந் திகதி அமைச்சரவைத் தீர்மான இலக்கம் 20/0581/205/019 இனையுடைய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் "நிலவீர அறிக்கை"யை இரத்துச் செய்வதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது. அத்தீர்மானத்திற்கு தனியார் சபையினால் எடுக்கப்பட்ட சட்டரீதியான செயற்பாடுகள் காரணமாக கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட "திரைப்படங்களை விநியோகித்தல் மற்றும் திரையிடுவதற்குரிய முறைமை" முறையாக அமைச்சரவை அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டிருந்ததோடு, அந்த விநியோகங்கள் மற்றும் திரையிடுவதற்குரிய முறைமையை நடைமுறைப்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆந் திகதிய இலக்கம் : அமை/21/1024/305/022 இனுடைய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் ஒப்புதல் பெறப்பட்டிருந்தன. இந்த அங்கீகாரத்தின் படி அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் இதுவரை வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதனால் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் மற்றும் திரைப்படத் துறை வளர்ச்சியில் பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

(உ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான இலக்கம் 224 இனுடைய வளாகத்தில் அமைந்துள்ள ஒற்றை மாடிக் கட்டிடம் 2007 ஆம் ஆண்டிலிருந்து பிரபல நாடகக் கட்டுப்பாட்டுச் சபைக்கு குத்தகை வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. இரு தரப்பினருக்கும் இடையில் இறுதியாக 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆந் திகதி

கைச்சாத்திடப்பட்ட இலக்கம் 4711 இனையுடைய குத்தகை ஒப்பந்தம் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்றிருந்தது. நாடகக் கட்டுப்பாட்டுச் சபையினால் அக்குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறி கட்டிடத்தை உடைத்து அகற்றி விட்டு சதுர அடி 2576 இனைக் கொண்ட புதிய இரண்டு மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்த புதிக கட்டிட நிர்மாணத்தின் ஆரம்ப வேலைகள் 2016 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், இதுவரை நிர்மாணப் பணிகள் நிறைவு செய்திருக்கவில்லை. முறைசார்ந்த எழுத்து மூல ஒப்பந்தமின்றி நாடக கட்டுப்பாட்டுச் சபையினால் நிர்மாணிக்கப்பட்ட இந்த புதிய கட்டிடத்திற்கான மின்சாரம் மற்றும் நீர் விலைப் பட்டியல் அவர்களினால் தமது நிறுவனத்தின் பெயரால் செலுத்தப்பட்டு கட்டிடத்தை பயன்படுத்தி வருகின்றார்கள் என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தை இரத்துச் செய்யப்பட்டு 02 வருடங்களும் 10 மாதங்கள் கழிந்திருந்தும், புதிய கட்டிடத்திற்காக அரச மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்று புதிய குத்தகை வாடகை மதிப்பிடப்பட்டு முறையான குத்தகை ஒப்பந்தத்திற்கு வருதல் மற்றும் நிலுவைத் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு கூட்டுத்தாபனத்தினால் எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(ஊ) கூட்டுத்தபானத்திற்குச் சொந்தமான இலக்கம் 224 இனைக் கொண்ட வளாகத்தில் அமைந்துள்ள இரண்டு மாடிக் கட்டிடத்தின் முதல் மாடி இலக்கம் 4660 இனை குத்தகை ஒப்பந்தத்திற்கு ஏற்ப 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆந் திகதி வரை ஒரு மாதத்திற்கு ரூபா. 315,000 ஆன குத்தகை வாடகை அடிப்படையில் கூட்டுத்தாபனத்தினால் செலசினே ரூபவாஹினி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. சினிமாப் பாடசாலையொன்றினை நிறுவுவதற்கு 2021 திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி இலக்கம் 1195 இனைக் கொண்ட பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் படி அழைப்பாணை அனுப்பப்பட்டு செலசினே நிறுவனம் கட்டிடத்தில் இருந்து வெளியேற்றுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. செலசினே நிறுவனத்தினால் இதுவரை கூட்டுத்தாபத்திற்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை குத்தகை வாடகை, நீர் மற்றும் மின்சார் விலைப் பட்டியல்களின் மொத்தப் பெறுமதி ரூபா. 4,111,810 ஆன தொகையாகும். சினிமா பாடசாலையொன்றை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த கட்டிடம் இந்த அறிக்கையிடும் திகதி வரை கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைக் கடன் தொகை அறிக்கைக்கு ஏற்ப 2020 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு திரைப்படத் தயாரிப்பிற்கும் திரையரங்குகளின் நவீனமயப்படுத்தலுக்குமாக கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டுள்ள அறவிடப்படாத முழு நிலுவையின் மொத்தப் பெறுமதி ரூபா. 85,14,055 ஆன தொகையாகும். அந்தப் பெறுமதியினுள் திரையிடலுக்காக விடுவிக்கப்படாத திரைப்படங்களுக்காக வழங்கப்பட்டிருந்த அறவிடப்பட முடியாத மொத்தம் ரூபா. 23,983,09 ஆன தொகையாகக் காணப்படுகின்றது. அதன்படி திரைப்படத் தயாரிப்பு, திரையரங்குகளின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கை மற்றும் வகைப்படுத்தப்படாத தயாரிப்புக்களை கடன் வழங்குநர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்தம் ரூபா. 85,174,055 ஆன பெறுமதியின் கூட்டுத்தொகை ரூபா. 72,712,671 ஆகும் . அதாவது நூற்றுக்கு 85.4 வீதம் அறவிடப்பட முடியாத நிலுவைக் கடனாகவும் வட்டித் தொகையாகவும் உள்ளது என

அவதானிக்கப்பட்டுள்ளது.மேலும், அப்பணத் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு நீண்ட காலத்திலிருந்து முடியாமல் உள்ளது.

(ஏ) 2001 ஆம் ஆண்டில் திரையரங்குகள் சபைகளுக்கு பிரிந்து செல்லும்போது எந்தவொரு சபைக்கும் வழங்கப்படாத, மூடப்பட்டிருந்த 137 திரையரங்குகளில் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய 19 வருடங்களுக்கு மேலான பழைய நிலுவைத் தொகையின் கூட்டுத்தொகையின் பெறுமதி ரூபா. 7,659,366 ஆகும். மேலும், சபைகளுக்கு பிரித்து வழங்கியதன் பின்னர் 2020 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை மூடப்பட்டிருந்த திரையரங்குகளுக்கு ஏற்புடையதாக அறவிடப்பட வேண்டிய முழு நிலுவைத் தொகையின் பெறுமதி ரூபா. 138,022,871 ஆகும் என்பதோடு, அதன்படி மொத்தம் ரூபா. 145,802,930 ஆன தொகை மூடப்பட்டிருந்த சகல திரையரங்குகளிலிருந்தும் அறவிடப்பட முடியாத நிலுவைத் தொகையாக இருந்து வருகின்றது.

(ஐ) 2020 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு சகல சினிமா காட்சிகளும் சபைகளுக்கு உரித்தாக செயற்படுத்தப்படும் திரையரங்குகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன் மற்றும் வட்டித் தொகையின் கூட்டுத்தொகை ரூபா. 241,538,242 ஆகும். அந்த தொகையின் கூட்டுத்தொகை ரூபா. 136,881,529 ஆன தொகை வட்டித் தொகையாகக் காணப்படுவதோடு, மொத்தம் ரூபா. 104,656,713 ஆன நிலுவைத் தொகையாகக் காணப்படுகின்றது. மொத்தம் ரூபா. 241,538,242 ஆன முழுப் பெறுமதியின் மொத்தம் ரூபா. 142,046,109 ஆகும். அவ்வாறாயின் நூற்றுக்கு 58 இனை அறவிடப்பட முடியாத நிலுவை தொகையும் வட்டியும் என கடன் அறிக்கைக்கு ஏற்ப அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஒ) ஊழியர் கடன் முற்பணங்களை செலுத்துதல் மற்றும் அறவிட்டுக் கொள்ளல் தொடர்பான அமைப்பின் நிர்வாகப் பலவீனங்கள் காரணமாக 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு அடையாளம் காண முடியாத கடன் முற்பண நிலுவையாக ரூபா. 539,222 ஆன தொகை காணப்பட்டது. மேலும், 05 வருடங்களைத் தாண்டியும் அறவிடப்படாத கடன் முற்பணம் ரூபா. 531,420 ஆகும், இதனை அறவிட்டுக் கொள்வதற்கு முகாமைத்துவம் எந்தவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(ஓ) 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் 2005 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியினுள் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை கருத்திற் கொள்ளாமல் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தைக் கணிப்பீடு செய்து செலுத்துவதன் காரணமாக அந்த நிதியங்கள் ஒழுங்குமுறையே ரூபா. 20,352,762 உம் ரூபா. 2,763,752 இற்கும் குறைவான பங்களிப்புத் தொகையே செலுத்தப்பட்டிருந்தது. அந்த நிலுவைப் பங்களிப்பு தொகையை மீள செலுத்தும் போது அதற்கான மிகை விதிப்பு பணமும் செலுத்த வேண்டி இருப்பதோடு, நிலுவைத் தொகை செலுத்துவதற்காக 2020 ஒக்டோபர் மாதம் 21 ஆந் திகதி நடைபெற்ற 1193 ஆம் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் இணக்கப்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதன்படி மொத்தம் ரூபா. 34,674,771 ஆன இந்த மிகை விதிப்புப் பணம் மற்றும் பங்களிப்புத் தொகை 2021 ஜூன் மாதம் 28 ஆந் திகதியன்று செலுத்தி முடிக்கப்பட்டுள்ளதுடன், அதற்படி மிகை விதிப்புப் பணமாக மொத்தம் ரூபா. 11,558,257 ஆன தொகையை பொருளாதாரமற்ற செலவாக கூட்டுத்தாபனத்தினால் ஏற்க வேண்டியிருந்தது.

(ஓள) 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு, கூட்டுத்தாபனத்தினால் 08 நடைமுறைக் கணக்குகள் பேணப்பட்டு வந்துள்ளதோடு, அத்திகதிக்கு அந்த நடைமுறைக் கணக்குகளில் காசுப் புத்தகத்தின் படி மொத்தம் ரூபா. 23,030,540 ஆன அநுகூலமான வங்கி நிலுவையொன்று பேணப்பட்டு வந்துள்ளது. அதன்படி மொத்தம் ரூபா. 23 மில்லியன் அளவு தொகை கூட்டுத்தாபனம் தன்னகத்தே செயற்பாடற்ற பணமாக வைத்துக் கொண்டிருப்பது நிதி முகாமைத்துவத்தின் வினைத்திறனற்ற ஒரு செயற்பாடாகவே அவதானிக்கப்பட்டுள்ளது.

(க) கலாநிதி "லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ்" அவர்களின் பெயரில் கூட்டுத்தாபன வளாகத்தில் ஒரு நூதனசாலையும் நூலகமொன்றினையும் நிர்மாணிப்பதற்காக அதன் நிர்மாண மற்றும் ஆலோசனை நடவடிக்கைகளின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா. 99,965,061 ஆன தொகை கூட்டுத்தாபனத்தினால் பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைப்பதற்கு இரு தரப்பினரும் ஒப்பந்மொன்றில் கைச்சாத்திட்டு, 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 05 ஆந் திகதி பணிகள் தொடங்கப்பட்டது. இந்த கட்டிட நிர்மாணப் பணிகள் இடம்பெறும் காணிக்கு கூட்டுத்தாபனத்தின் பெயரில் உறுதி இல்லாமையினால், அந்த கட்டிட நிர்மாணத்திற்கு மாநகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அனுமதியும் பெற்றிருக்கவில்லை. அத்தோடு அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்படாமல் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிர்மாணப் பணிகளுக்கு 2020 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு மொத்தமாக ரூபா. 3,134,107 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. அத்தோடு 02 வருட காலமாக இந்த கட்டிடத்திற்கான நிர்மாணப் பணிகள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதனால் கட்டிடம் அழிவுக்கு உட்பட்டு வருகின்றது.

(ங) கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகள் 03 இற்காக ஒப்பந்த அடிப்படையில் பதிற் கடமை / கடமைகளை மேற்கொள்ளல் என்ற அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஏற்ப தேவைப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்திராத மூன்று உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவ்வாறு நியமனம் செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளியேறல், கை விரல் ரேகை அடையாள இயந்திரத்தைப் பயன்படுத்தி உறுதிப்படுத்தாமல் சம்பளம் மற்றும் பிற கொடுப்பனவுகளாக மொத்தம் ரூபா.3,098,046 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

டப்ளியூ.பி.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வு தலைமை அதிபதி



ශ්‍රී ලංකා ජාතික චිත්‍රපට සංස්ථාව

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

NATIONAL FILM CORPORATION OF SRI LANKA